உ

ஸ்ரீ முன்னேஸ்வரம்

ஸ்ரீ முன்னைநாதர் வடிவாம்பாள்

# திருக்கோல காட்சி !



18-08-1999

கா. பெரியசாமி பிள்ளை

பி.வி.எஸ்.ஆர். புக் சென்டர் அன் பிச்சர் பெலஸ்

138/3, முருத்தவள, மாவனல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முன்னை நாதர் வடிவாம்பாள் திருக்கோல காட்சி

## திருக்கோலக் காப்பு விருத்தம்

### ஆசிரிய விருத்தம்

அன்னை கௌமாரியே அரன்பாரி அம்பிகா
உன்னை என் இதயமதில் உருகியே கூவினேன்
முன்னை வினை தீர வருவாய் வடிவழகியே
என்னை உன்பாலனாய் எற்பதுன் பாரமே.

பூமேவும் மாந்தர் தொழும் பழம்பெரும் ஸ்தலமான
பேர்தங்கும் முன்னேஸ் வரம்வாழ்
பூரணி புராதனியும் புவனி சொரூபினியும்
பொன்வடி வாம்பி கையும் நீ
நாமேவும் நற்காலா வல்லியும் நீ எனது
நலங்காக்கும் தாய் தந்தையும் நீ
நாதவித் தாந்தமுத வானமுன்னை நாதர்
நாடுஞ் சிவ காமியும் நீ
பாவேம் பண்டிதா சிரோண்மணி மனோன்மணியும்
பலவும் நீதானென்றுணையே
பன்னாளும் துதிபாடிப் பணிபுரி கின்றநின்
பாலன் பக்கத் திலிருந்து
காவேம் கருணைதந் தெனையாளு மம்பிகா
கைலாசற் கினித்த முகமே
கங்காளி பைரவி கன்னி திரி சூலியெனும்
கண்கண்ட தேவி உமையே
தக்கோர் தொழும்பதி யென்னுமுன் னேஸ்வரச்
சன்னி தானத்தி னழகும்
தடம்பெரும் வாவிசூழ் தாமரைத் தடாகமும்
தகுமாய வாற்றி னெழிலும்
மிக்கதோர் வர்ணணை காட்டி எது சொல்லினும்
மிகையாகி டாதஸ் தலமாய்
மிதவைகள் நாற்புரமு மதில்வளரு மிருநாளம்
மிகுதி கைச்செண்டு எனவும்
பக்கமெல் லாம்வயல் பிரம்பு நிறை தேஞ்சோலை
பொங்குகடல் ஒலிகள் பலவும்
பகலிரவு பார்திருந் தாலும் வாடாத
பதிவாழும் அம்பிகா என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கறுத் திதுவேளை எனையாள வந்திடும்
சின்மயா னந்த னுறவே
சிங்கார வீதியில் லங்காரத் தேரில்வரும்
சுடர்முத்து வடிவாம் பிகையே
பண்டு ராவணனைச் சங்காரஞ்செய் தேராமர்
புட்பக விமான மதிலே
பாரதம் நோக்கிவரும் மார்க்கமிங் ஙனம் வந்து
பிர்மகத்தி பிரிந்தகன்று செல்லக்
கண்டு இதில் மகிடையுண் டென்றே இறங்கிடக்
கலச கோபுர மிலங்கும்
காட்சிகண் டேராமர் ஆச்சிவடி வாம்பிகை
கங்காளர் தன்னை பணிய
நின்று ராமசிவ லிங்கமதைப் பூசித்து
நீ செல்லல் நன்று என்று
நிமலனுரைத் திடநெடிய மாலான ராமர்பணி
நிறைதலப் பெருமை தன்னை
விண்டுசொல் லிடவொரு நாவிலெளி தாவதோ
வேதமைத் தினை வகுத்த
வியாசமுனி யும்மஞ்சி வணங்குமுன் னேஸ்வரம்
வாழ்வடி வாம்பிகை சமேதநாதா
தஞ்சமென் றேராமர் சாட்சாத் மகேசனைத்
தரித்சித்து சிவனே இந்த
சாயாரு பம்பிரம கத்திஇன் னும்மெனைத்
தொடருமே என்றி ரஞ்ச
மிஞ்சிய வினையிருந் தாலும் ராமா நீகேள்
முந்தல மாயிலங்கும்
முன்னேஸ்வ ரம்திருக் கேஸ்வரம்
மதில்சிவ லிங்கம்வைத் துப்பணிந்து
மஞ்சுநிகர் மாயவாற் றுக்குவட பாகத்தில்
மானவரி என்ற தலம் துண்டு
மிகிமைப் படவுன்பே ரால்ராம லிங்கமென
வைத்ததைப் போற்றி செய்து
விஞ்சைகொண் டிலங்குஞ்சிவ தலந்தெரி சித்தாலே
வினை ஏதுமிலை என்ற
விமலன் வடிவாம்பிகை வீற்றிருக் கும்தலம்
விளங்கும் நலமூர்த்திஸ் தலமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயமலைச் சாரலில் துவாபர யுகத்தினில்
இருடிகள் கூடியாகம் செய்கையில்
இதிகாச முணர்ந்தவே தனியாச ரங்ஙனம்
எழுந்தது கண்டவர்கள் வணங்கி
சமயமிது சுவாமி நீ வீர்வந்து தெங்களோர்
சந்தேகம் தீர்த்த ருளுவீர்
சகலவுல கர்த்தா அரனா அரியாவெனச்
சாற்றியதைக் கேட்ட வியாசர்
அமைய நீவீரறப ஞாளமில் லீர்போல
அரிய வந்தீர் கேளுங்கள்
ஐயனென் ஹரியேதான் எனவலக் கரந்தூக்கி
ஆட்டியதைச் கண்ட ரிசிகள்
நமது இரு தயசுத்தி பெறவிது போல்காசி
நாதர் சன்னதியின் முன்பு
நாடிச்சொல் லிடவேணு மெனசௌன, காதியர்முன்
நன்று நான்றென வியாசகர்
கங்கையில் நீராடி அங்கந்திரு மண்பூசி
காசி ஷேத்திர மடைந்து
கனஇறு மாப்போடு பலரும்பார்த் திடமுன்போல்
கரம் சிரம் மேலுயர்த்தி
பொங்கு புவனகர்த்தா விஷ்ணுவன்றி வேறு
பரத்தொன்று மில்லை எனவே
பகர்ந்ததைக் கேட்டநந் தீஸ்வரர் வெகுண்டுமே
பரம விரோத மாக
இங்குசிவ தூசனை செய்து நீட்டியகரம்
இருந்த வாறிருக்க வென்றே
இடுசாபம் கண்டுஹரி அங்குபிர சன்னமாய்
ஏ! வியா சாநீ கேட்பாய்
எங்கும் நானேகர்த்தன் என்பது உண்மையே
எனக்குக் கர்த்தன் சிவனே
எனஓதி மறைந்த விஷ்ணுந்தொழுமுன் னேஸ்வரம்
அமர்ந்தவடி வாம்பிகை சமேதநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரஹரி நாரணா எனஓதி வியாசகர்
நந்தி பொருமானை அணுகி
நாதனே இச் சிவதூசனை செய்த பாவத்தை
நானெங்கும் தீர்ப்பே னென்ன
துரதிஷ்ட மெவர்க்கு முண்டுவியா சாஇந்தத்
தோஷம் நீங்கிட வென்றாலே
தென்னலங் கையிலுள்ள முன்னேஸ் வரம்சென்று
தீர்ப்பா யென்றருளி செய்ய
சிரமேற்கொண் டவ்வாறே சீடர்கள் வியாசரை இத்
தீர்த்த மகிமை கேட்கவே
அரனை அரியை மதிக்காமல் ஒரு காலத்தில்
அனைத்து நாமென்னும் அகந்தையாலே
அடைந்த தவநிலைகற்பு அழிந்த கதையால்வந்த
ஆறே இம்மாய னாரு

முன்னாளில் தாருக வனத்தவ சிரேஷ்டர்கள்
மமதையை அடக்க வென்றே
மாயன்மோ கினியாய்ம கேசன்பிச் சடனாராய்
வடிவு கொண்டங்கு சென்று
துன்னத வாய்ச்சிவன் தவமாத் ரைக்கொடுத்
திடமாயன் ரிசிகளை துவழவைத்து
திருவிளை யாடல்புரிந்த தரியரனும் கூடியதில்
செனித்தங் கொருதிருக் குமரனாக
மின்னும் அரனே எனைக் கூடியவ தரித்திட்ட
மகனரி ஹரபுத்ரன் வாழ்தலத்தில்
மேலுமெனை வந்தனைய வேணுமென அரி சிவனை
வேண்டியதற் கிணங்க என்றும்
நன்னுமா யவனாராய் நீ பிரவா கிந்திரு
நாம்வருட தோறும் வந்து
நிறை பூரனை அன்று சுபவேளை யுங்கண்டு
நின்று விளையாடி மகிழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னை நாதர் - வடிவாம்பாள் திருக்கோலக் காட்சி

### வெளி பிரம்பெடுத்து என்ற இசை ஏக தாளம்

1. சேத்திரம் என்று சொன்னாள் - முன்னேஸ்வரச்
சேத்திரம் இதுதானே
தென்னிலங் கையில் உள்ள - முன்னேஸ்வர
சேத்திரம் இதுதானே (சே)

2. ஸ்ரீராமரும் துதித்து - வணங்கிய
சேத்திரம் முன்னேஸ்வரமே
பேர் புகழ் வியாசருமே - பெற்ற தோசம்
போக்கிக் கொண்ட ஸ்தலமே (சே)

3. சூரிய குலோத்துங்க - மனுச் சோழ
ராசன் துதித்ததுவே
தும்பை மலரணியும் - சிவன்வடி
வாம்பாள் குடிகொண்டதே (சே)

4. ஆறுபத்து நான்கு - நாயன்மார்கள்
பேரும் புகழ்படவே
அருள் தங்கும் சிலை உருவம் - உள்ளஸ்தலம்
இது ஒன்றே வேறிலையே (சே)

5. வேப்பமாலை புனைந்த - மதுரை
மன்னன் பெயர் துலங்க
மீனக்கொடி பொறித்த - நகை பூண்ட
விக்ரகம் உள்ளதுவே (சே)

6. மாதம் நடக்கும் விழா - மகேஸ்வரன்
கோலம் பூண்டிடும் விழா
பேதமில்லா தெவரும் - வணங்கியே
போற்றிடும் திருவிழா (சே)

7. பிச்சை எடுக்கும் விழா - பரிஏறி
ஆடிடும் வேட்டை விழா
மெச்சும் அலங்காரத் - தேர்வரும்
மகிமை காணும் விழா

8. மாட்டு வண்டி பூட்டி - ரதம் வந்து
மாயவன் ஆற்றினியே
பாட்டு முலக்கத்துடன் - நிராடி
பரமன் மீனாளுடனே

9. சித்திர மண்டபத்தில் - விற்றிருக்க
மத்யப் பூசை பெருமே
சிலாபம் சென்றிரவு - வானவெடி
சோராய் இருந்திடுமே (சே)

10. மங்கள மாகவடி -வாம்பாள் முன்னை
நாதர் உதயத்திலே
தங்க மயக் கோபுரம் - வந்தடைந்து
தரிசனம் தருவாரே (சே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கியோன் கா பெரியசாமிபிள்ளை

# ஆலயப் பெருமை

## கண்ணிலே இருப்பதென்ன என்ற மெட்டு

மண்ணுலகிற் சிறந்த மாதலம் முன்னேஸ்வரம்
மாதா வடிவாம்பிகை வாழ்த்திடும் முன்னேஸ்வரம்
எண்ணித் துதித்தவர்க்கு இட்ட சித்தி யாவையும்
ஈயுமுன்னை நாதசிவன் இருக்கும் முன்னேஸ்வரம் (ம)
அறுபத்து நான்கு நாயன்மார் வரும் முன்னேஸ்வரம்
அஷ்ட திக்குப்பாலர் காக்கும் கட்டிடம் முன்னேஸ்வரம்
பொருமுயரச் சிகரம் பொன்னகர் முன்னேஸ்வரம்
பேணும் மூலஸ்தானம் புவிபுகழும் முன்னேஸ்வரம்
மாதவத் தபோதனர்கள் வணங்கும் முன்னேஸ்வரம்
மனுச்சோழ ராஜராஜன் துதித்த முன்னேஸ்வரம்
பேதமில்லா தேவரும் போற்றிடும் முன்னேஸ்வரம்
புண்ணிய தீர்த்தங்களுள்ள புனிதமுன்னேஸ்வரம் (ம)
லங்கைச் சர்கரவர்த்திகள் நாடி தொழுதஸ்தலம்
நன்மைக்கென காணிபல நல்கப் பெற்ற ஓர் தலம்
தங்கமயமாகச் சொலிக்கின்ற இம்முன்னேஸ்வரம்
சரித்திரப் பிரசித்த பெற்ற சீர்தலம் முன்னேஸ்வரம்

நம் நாடு திரை படத்தில்
நல்ல பேரை வாங்க வேண்டும் என்ற மெட்டு

முன்னைநாதர் பொன்னடியை போற்றுவோம் - ஞான
முத்தமிழில் பாமாலை சாற்றுவோம்
ஆண்ணல் நம் குறையகற்றும் ஆண்டவன் அன்று
அம்பலத்தில் நடமிடும் தாண்டவன்
எண்ணிய வரமளிக்கும், ஈஸ்வரன் ஜோதி
எழில் மிகு வடிவாம்பாள் மகிழ்பரன்
கண்ணப்பனுக்களும், காட்சி காவலன் காலில்
கங்கண சிலம் பணித்த பாவலன் (மு)
அம்புலி கொண்டடையணிந்த, அண்ணலாம் சக்தி
ஆபரணம் யாவும் படைத்த, மின்னலாம்
ஜம்புதீவில் முன்னேஸ்வர, ஷேத்திரம் வாழும்
சாம்பசிவனுக்கு பாடும் தோத்திரம் (மு)
குயில்பாட மயிலாடும் நன்நகர் நமது
குறைதீர்க்கும் முன்னேஸ்வர பொன்நகர்
எழிலோடு தேவரெல்லாம் இன்நகர் வந்து
இரத விழா கொண்டாடுவார் விண்ணவர்
மதியோடு கடல் சேரும் மாநதி என்ற
மாயனார் தீர்த்த கரை சன்னதி
முதிராத தவமுனிவர் கூடியே தீர்த்த
முறையோடு வணங்குவர் கொண்டாடியே, (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம்பசலி திரைபட இசையில்
(அண்ணா என்றொரு என்ற மெட்டு)
முன்னேஸ்வர நகர் நண்ணு வராம்
முன்னைநாதரெனும் அண்ண வராம்
கண்ணன் தனக்கருள் சொன்னவராம்
கருதுவோர் கருள் பண்ணு வராம்
அன்புத்துதிக்கருள் பண்ணு வராம்
அரவம் அணி எனப் பூண்ட வராம்
இன்பமனைவியை வென்ற வராம்
இகமதில் முத்தொழில் கண்டவராம்
அன்னை வடிவு நன்மணவாளன்
ஆகமம் போற்றிடும் மறைமூலன்
விண்ணோரிடர் தீர்க்கும் தயாளன் (மு)
விளங்கும் முனனேஸ்வர நகர்சீலன்
மால்அயன் காணத மலர்பாதன்
மதியோடுநதியணிந்தும் போதன்
கால்சிவந்திட ஆடியவேதன்
கவிஞன் பெரியசாமி பிள்ளை துதி நாதன் (மு)

1. கும்மியடி பெண்கள் கும்மியடி - தினம்
கூடிக் கும்மியடியுங்கடி
எம்மையாளும் வாடிவாம்பிகை பாதத்தை
ஏற்றிக் கும்மியடியுங்கடி (கும்)

2. எத்திக்கிலும் வாழும் மக்களெல்லாம் - கூடி
ஏங்கி வாடி மனம் கசிந்து
பக்தி பாசத்துடன் அம்பிகை பாதத்தை
பார்க்க வென்று சிரமே பணிந்து (கும்)

3. கோச்சி மோட்டார் சைக்கில் தன்னிரிலே - மக்கள்
கோடான கோடி சிலாபம் தன்னில்
நேர்த்தியாகவே வந்திறங்கி - நன்றாய்
நின்று இளைப்பாறி கால் நடையாய் (கும்)

4. பக்தி மனத்தோடு ஸ்நானங்கள் பண்ணியே
கற்பூரம் காளாஞ்சி தான் எடுத்து
சுத்தி வலம்வந்து தேவி வடிவாளை
தோத்தரித்து கும்மி கொட்டுங்கடி (கும்)

5. ஊரார்கள் செய்திடும் ஒவ்வோர் உபயத்தை
ஊகித்து நின்றோதும் பாப்பனர்கள்
ஆராதனை செய்து அம்மையானை அப்பனை
அன்புடன் பூரதம் மீதேற்றி (கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அண்களும் பெண்களும் ஒன்று கூடி மிக
ஆரவார மேள தாளத்துடன்
மான் மழுவேந்தும் மகிமை பிரதாபனை
மந்தை வலம் சுற்றி கோவில் வந்து (கும்)

7. வெளி வீதி உள் வீதி சுற்றிப் பவனியே
வேதாகம விதி ஓதிச் செய்து
விடியும் வரை களைக் கூத்துகளாடிடும்
வேடிக்கை பார்த்து கை கொட்டுங்கடி (கும்)

8. பார்த்து மகிழ்ந்து பொழுது விடிந்ததும்
பங்குடன் குளித்து பட்டுடுத்தி
பண்புடன் காளாஞ்சி தானெடுத்து - அம்மை
பத்திரகாளி கோவில் தன்னை நாடி (கும்)

9. அரசு கருங்கால் தேங்கு நிழலிலே
அன்னையைத் தஞ்சமென்றே பணிந்து
ஆயிபத்ர காளி பூசை கண்டு அன்ன
தானமும் சீருடன் வாங்கி உண்டு (கும்)

10. கொக்கரக்கோவென சேவலும் கூவிட
கோடி சனங்களும் கேட்டெழுந்து
பக்தி ரசத்துடன் கும்மிதனைப் பாடி
பாவையாரே கும்மி கொட்டுங்கடி

11. மாட்சி மிகுந்திடும் காட்சிதனைப் பார்க்க
மங்கையாரே ஓடி வாருங்கடி
ஆச்சி வடிவியை தோத்திரம் பண்ணியே
அன்பு திருவிழா பாருங்கடி (கும்)

12. தேரோடும் திருநாளைப் பார்த்து அனைவரும்
தீர்த்தக் கரைதனை நாடி நின்று
சீருடன் பால்பழம் சர்க்கரை அவல் சேர்த்து
சிவனாரின் பூசைகள் தான் சிறக்கும் (கும்)

13. மானேந்தியே கொன்றை மாலையணி சிவன்
மாயவனாற்றினில் தீர்த்தமாடி
வானோர் மகிழ்ந்திட சுவாமி ரதமேறி
வந்திடும் மகிமையைப் பாருங்கடி (கும்)

14. சாலோக சாமீப சாரூப சாயுட்சயம்
தந்திடும் முன்னேஸ்வர நாதன்
கோலாகலத்துடன் மேளத்தாளத்தோடு
நாலா திக்கும் மக்கள் சூழ்ந்து வர (கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சாந்த நிறைந்த சிலாபம் நகர் - நடுச்
சந்தியில் சுவாமியை நான் நிறுத்தி
காந்தம் பொருந்திய ஒலிபொருக்கி வைத்து
கண்தெரியார் பாடும் பாட்டிசைத்து (கும்)

16. பாடல்களை கேட்டு நாட்டமுடன் கொட்டிப்
பாலத்தின் அக்கரைப் புல்வெளியில்
ஆட்டக்கரகமும் ஆகாய வானமும்
அண்டமதிர்ந்திடும் பாருங்கடி (கும்)

17. மூன்று மணி நேரம் முற்றவெளி தங்கி
முக்கண்ணன் சுவாமிரதம் திரும்பி
பியாண்டு கிளாரிநெட் நாயண வாத்தியம்
பேரிகை நாட்டு முரசொலிக்க (கும்)

18. யாழ்நகர் சீமான்கள் தோரணம் கட்டியே
பால்பழம் வைத்துமே பூசை செய்து
வேல்முருகள் தந்தை வீதி வலம் வரும்
வேடிக்கை கும்மியைக் கொட்டுகங்கடி (கும்)

19. வித்தகர் போற்றிடும் பொற்தேருமே வந்து
முத்துவேலர் கடைமுன்னே நின்று
பக்தியாய் கற்பூர ஆராதனைத் தீபம்
பூசை கிரியைகள் தான் முடிந்து (கும்)

20. ஆடல் பாடலோடு நேர் கிழக்கே வந்து
ஆலமரத்தடிச் சந்தி நின்று
தேடல் மிகுதிரு ஐயனார் கோவில் முன்
திவ்ய திருபூசை தான் செபித்து (கும்)

21. பத்திரகாளி கோயில் லெச்சுராமன் குலப்
பாலர்கள் தேவியை தான் தொழுது
பேரோங்கிட தீப அராதனை கொண்டு
பெண்களும் ஆண்களும் பூசைகண்டு (கும்)

22. இரத்தின கைலாச நாத குருக்களின்
நற்கரத்தால் அபிஷேகம் செய்து
சித்தமகிழ வடிவாம்பால் பாதத்தை
சேவிக்கும் கும்மியை பாருங்கடி (கும்)

23. சிங்காரமாய் மேள தாளம் முழங்கிட
செப்பும் பெரியசாமி பிள்ளை தமிழ் பாடிட
மாங்காப் புகழ் முன்னை நாதர் வடிவாம்பாள்
மங்களக் கும்மியை வாழ்துங்கடி (கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேஸ்வரம்
ஸ்ரீ முன்னை நாதர் வடிவாம்பாள்
அருள் கிடைக்க வாழ்த்துகின்றோம்

அழகு நங்கையர் அழகுக்கு அழகூட்டும் நகைகளை என்றுமே அசல் 22 கரட்டில் பெற்றிட
பலவருட காலம் புகழ்பெற்ற நகை
மாளிகைக்கு இன்றே விஜயம்
செய்யுங்கள்.
எதிர்காலத்தில் நவீன நகைகளை இப்போதே
வாங்கவும் மங்கையர் தம்கற்பனையில் அவ்வப் போது
உதிக்கும் டிசைன் நகைகளை உடனுக்குடன்
செய்து கொள்ளவும் பெஷன் மாறிய பழைய
நகைகளை நவீன டிசைனாக மாற்றவும்
திருமணத்திற்கு வைபவரீதியாக
பொன் உருக்கிதாலிக்கொடி
செய்வதற்கும்
பாவிக்காது வைத்திருக்கும் பழைய தங்கம் வெள்ளி
நகைகளை உயர்ந்த விலைக்கு விற்கவும்
எல்லோரது உள்ளங்களிலும் இல்லங்களிலும் புகழ்மிக்க இடங்கள்

# அம்மன் ஜூவலஸ்

இல 29 செட்டியார் தெரு கொழும்பு 11
Tel: 332033

---

# அருள் ஜூவல்ஸ்

நீர் 3 செட்டியார் தெரு
கொழும்பு
போன் 436331

---

# கிளை அருள் ஜூவல்ஸ்

நீ 105 காலிரோட் வெள்ளவத்தை
கொழும்பு 6 போன் 580230

---

# ஸ்ரீ கல்யாணி ஜூவலஸ்

நீர் 5 செட்டியார் தெரு
கொழும்பு போன் 323657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org